

அமரர்

# கந்தையா கார்த்திகேசு

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர்
# கந்தையா கார்த்திகேசு
## அவர்கள்

தோற்றம்
10-1-1925

மறைவு
04-02-2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாதான் கார்த்திகேசன்...

சீர்த்தியான் பேரன்பின்
தமிழ்நெஞ்சன் அனைவரையும்
சிரித்துப் பேசி
ஈர்த்தெடுக் கின்ற தனி
ஆற்றலான் மண்மறவாத்
தமிழ் ஈழத்தான்
நேர்த்தியான் அறம் என்றும்
பிழைக்காத நெஞ்சத்தான்
பண்பின் செல்வன்
கார்த்திகேசன் வாழ்க்கை
அழியுமோ காலத்தால்?
அழியா தம்மா!

- காசி ஆனந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

அமரர் திரு. கந்தையா கார்த்திகேசு அவர்கள் 10-1-1925இல் தமிழீழத்தின் வடகடல் எல்லையில் அமைந்த வரலாற்றுப் புகழ்மிக்க சிற்றூராம் நெடுந்தீவில் திரு. அப்புக்குட்டி கந்தையா அவர்களுக்கும் திருமதி கந்தையா சின்னப்பிள்ளை (சின்னன்) அவர்களுக்கும் அருமை மகனாகப் பிறந்தார்.

இனிச்ச இலந்தைப் பள்ளியில் குருவிச் சட்டம்பியாரிடம் இவர் பாடம் கற்றார்.

தாயார் சிறுவயதிலேயே இறந்துவிட நேர்ந்ததால் - அப்பாவின் கைகளே இவரைத் தாங்கிற்று.

அப்பாவின் அன்பிலும் அரவணைப்பிலும் கார்த்திகேசு அவர்களின் இளமைக் காலம் அரும்பி - முகை அவிழ்த்துப் பூவானது.

மனைவியாக ஆறுமுகம் காமாட்சி அவர்களைக் கைப்பிடித்து 2-4-1952இல் மனையறம் தொடங்கினார் கார்த்திகேசு.

கொழும்பில் கார் சாரதியாக தொழில் வாழ்க்கையைத் தொடங்கிய கார்த்திகேசு அவர்கள் பிற்காலத்தில் குத்தகையாளராய் - அரசு காடுகள் குத்தகை - விறகாலை எனக் கொஞ்சம் கொஞ்சமாக தொழில் நிலையில் வளர்ச்சி பெற்றார்.

இவர் குடும்பம் என்றும் செழித்த குடும்பமாகவே இருந்தது.

உயர்ந்த பாசம் மிக்க குடும்பங்களின் தலைவர்களாய் - தலைவிகளாய் விளங்கிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளியம்மை - சின்னத்தம்பி - கதிராசி - சின்னதுரை ஆகியோர் இவர் உடன்பிறப்புக்கள்.

இனியவர்களான நாகேந்திரம் - செல்லம்மா - சிதம்பரப்பிள்ளை - வேலாசி - சின்னப்பிள்ளை - மற்றும் பார்வதி - சோமசுந்தரம் - செல்லையா (தனுஸ்கோடி) ஏகாம்பரம் ஆகியோரின் மைத்துனராய் கார்த்திகேசு அவர்கள் இருந்தார்.

கார்த்திகேசு அவர்களின் இல்லற வாழ்க்கையின் நீண்ட காலப்பகுதி யாழ்ப்பாணம் கொட்டடியிலேயே கழிந்தது.

அன்புமிக்க உறவினர்கள் - இனிய நண்பர்களின் அரவணைப்போடு - அவரும் அவர் அன்பு மனைவியும் குழந்தைகளை ஈன்று அகமகிழ்ந்த காலம் அது.

நல்லையா (ராசு) (பிரான்ஸ்) - குலேந்திரன் (இந்திரன்) (கனடா) - ரகுலேஸ்வரன் (ஈசு) (பிரான்ஸ்) லலிதா (அம்பிகா) (கனடா) மகேந்திரன் (கண்ணன்) (நோர்வே) ஜீவா (லிங்கா) (கனடா) ஆகிய நன்மக்களை ஈன்ற தந்தையாக நலமும் - வளமும் பெற்று வாழ்ந்தார் கார்த்திகேசு.

வாசுகி - தவராணி - புவனேஸ்வரி (வசந்தி) - ராஜேந்திரன் - கலையரசி - ரவிநாதன் ஆகியோரின் அன்பு மாமனாராக வாழ்ந்தார்.

அபிநயா - அகவன் - அகல்யா - அதிசயா - அவந்தியா - ஆர்த்திகா - அபிநயன் - அர்ச்சயா - அநோஜன் - தனுஜன் - அருணன் - அனித்தா - பங்கஜன் - சாருஜன் - விதுரன் - சேரன் - ஆதவன் ஆகியோர் அவர் பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறுப்பிட்டி பாட்டனார் வழி உரிமை கொண்ட பேச்சியம்மன் கோயிலில் ஈடுபாடும் அம்மன் வழிபாடும் கொண்டவராய் இருந்தார் கார்த்திகேசு.

பழகுவது எப்படி என்பதை கார்த்திகேசு அவர்களிடம் பழகித் தெரிந்து கொள்ளவேண்டும். பலரும் விரும்பும் பாசத்துக்குரியவராய் விளங்கினார் அவர்.

வளசரவாக்கத்தில் (சென்னை) அவர் வாழ்ந்த இறுதிக் காலப்பகுதியில் ஈழத் தமிழர் வீடுகளில் நிகழும் சிறப்பு நிகழ்ச்சிகள் அனைத்துக்கும் துணைவியார் திருமதி காமாட்சி அம்மையாரோடு வருகை தர அவர் தவறியதே இல்லை.

பெற்றோரின் பாசத்துக்குரிய பிள்ளையாய் - உடன்பிறந்தவர்களின் உற்ற துணையாய் - இல்லத் துணைவியாரின் இனிய கணவனாய் - பிள்ளைகளின் நெஞ்சம் விட்டு அகலாத பாசப் பிணைப்பாய் - மருமக்களின் அன்பு மாமனாய் - பேரப்பிள்ளைகளைத் தோளில் சுமந்து விளையாடிய பேரன்பு மிக்க பாட்டனாய் - நண்பர்கள் மறவாத நண்பனாய் - உற்றார் உறவினரின் இனிய உறவாய் 86 அகவை வரை பெருவாழ்வு வாழ்ந்த பேறு பெற்றவர் கார்த்திகேசு.

நிறைவாழ்வு கண்ட திரு. கார்த்திகேசு அவர்கள் சென்னை வளசரவாக்கத்தில் 4-2-2011இல் இறைவாழ்வு பெற்றார்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொட்டடி நித்யானந்த சுவாமிஜி இரங்கல்...

*ஓம் நமச்சிவாய*

உயர்திரு கந்தையா கார்த்திகேசு ஐயா அவர்கள் யாழ்ப்பாணம் கொட்டடி என்னும் இடத்தில் எனது வீட்டுக்கு அருகாமையில் சிறப்புற வாழ்ந்தவர். இவருடன் எனக்கு அரை நூற்றாண்டு காலமாக பழக்கம் உண்டு. தற்போது அவருடைய வளசரவாக்கத்தில் உள்ள வீட்டில் வசித்து வருகிறேன். ஐயா அவர்கள் அன்பும் அமைதியும் உடையவர். துன்ப துயரங்களை இலகுவாக எடுத்து வாழ்ந்த பெரியவர். இன உணர்வு இறையுணர்வு உடையவர். அவருடைய பிள்ளைகள் தமிழ், இன உணர்வு கொண்டவர்கள். தமது இனத்துக்காக முழுமையாக பங்களிப்புச் செய்தவர்கள். அப்பேர்ப்பட்ட பிள்ளைகளின் தந்தை மறைந்தும் மறையாத பெருமகன். மன்னிக்கும் தன்மையுடைய பெருங்குணம் கொண்டவர். அவரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுதல் செய்து, அவருடைய குழந்தைகள் பெருமகிழ்ச்சியோடு வாழ அம்மை அப்பரை வணங்கி வேண்டுகின்றேன். மறைந்தும், மறையாத ஐயா அவர்கள் எல்லோருக்கும் நன்மைபுரிவாராக.

**கொட்டடி நித்யானந்த சுவாமிஜி**

*யாழ்ப்பாணம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
மையத் தொழில் நுட்பப்பயிலக வளாகம், 2வது முதன்மைச் சாலை,
தரமணி, சென்னை-113

21–02–2011

**பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்**
இயக்குநர்

## நினைவேந்தல் செய்தி

அமரர் கந்தையா கார்த்திகேசு *(யாழ்ப்பாணம்)* அவர்கள் எனது நல்ல நண்பர். திரு. கா. நல்லையா அவர்களின் தந்தையார், நல்லொழுக்கமும், நற்பண்பும் நிறைந்த குடும்பத்தவர். குல வணிகத்தில் ஆற்றொழுக்காய் மேம்பட்டுச் சிறந்தவர். இன உணர்வும் இறையுணர்வும் நிறைந்த மனிதநேயர். இயற்கையெய்திய அப்பெருமகனாரின் நற்பண்புகளையும், நற்சிந்தனைகளையும் போற்றி அவ்வழியில் நின்று அவரது நினைவைப் போற்றும் வகையில் அவர் விட்டுச் சென்ற பணிகளை அப்பெருமகனாரின் வழித்தோன்றல்கள் தொடர வேண்டும். அத்தகு உயர்ந்த மனிதரைப் பிரிந்து வாடும் அவரது வழித் தோன்றல்களுக்கு அவர் வணங்கும் முருகன் நல்ல ஆறுதலைத் தரவேண்டும்.

*பேராசிரியர் கரு.அழ. குணசேகரன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிள்ளைகள் இரங்கல்...

உங்களை எப்படி மறப்போம் அப்பா?

சிரித்தபடி எங்கள் நெஞ்சில் என்றென்றும் நிலைத்த உங்கள் முகம்...

அன்போடு எங்களை அணைத்து வளர்த்த உங்கள் கைகள்...

எங்கள் பிள்ளைகள் ஏறிவிளையாடும் உங்கள் தோள்...

காலமெல்லாம் ஓடி உழைத்த உங்கள் ஓய்வறியாத கால்கள்...

நகைச்சுவை நிறைந்த உங்கள் பேச்சு...

வாய்திறந்து உங்களை ஊரார் வாழ்த்தும் நிறைவான வாழ்க்கை...

உங்களை எப்படி மறப்போம் அப்பா?

*-பிள்ளைகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

*திருச்சிற்றம்பலம்*

## தேவாரம்

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கை தொழக்
கற்றுணை பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெரு மானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோா உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே
சித்தத்துட் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துஉகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## பெரியபுராணம்

உலகெ லாம்உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளையாடு முகமொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசு முகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்கு முகமொன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகமொன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகமொன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்.

*திருச்சிற்றம்பலம்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

## தேவாரம்

### திருக்கேதீச்சரம்

நத்தார்படை ஞானன்பசு ஏறிந்நனை கவிழ்வாய்
மத்தம்மத யானை உரி போர்த்தமண வாளன்
பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்
செத்தார்எலும் பணிவான்திருக் கேதீச்சரத் தானே.

### திருக்கோணமலை

நிரைகழல் அரவம் சிலம்பொலி அலம்பும்
நிமலர் நீறணி திரு மேனி
வரை கெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்தும் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமாமலை அமர்ந்தாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமுஞ் சுற்றமம் ஓரூ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் தும்நீ
யிறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

நீள நினைந்து அடியேன் உனை நித்தலும் கை
தொழுவேன்
வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச் சிலநெல்லுப்
பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித்
தரப்பணியே.
பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடை மேல் மிளிர் கொன்றை
அணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே.

குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ் சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்து
என் மனத்திடை மன்னிய மன்னே
சிறை பெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந்துறை யுறை சிவனே
இறைவனே நீ என் உடல் இடம் கொண்டாய்
இனி உன்னை என் இரக்கேனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி உள் ஒளி பெருக்கி
உலப்பிலா ஆனந்தம் ஆய
தேனினைச் சொரிந்து புறம் புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்து அருளுவது இனியே

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங்காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந்தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார் உலகில்
ஊரும் உலகும் கழற உளறி
உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மேனிபொலிந் திலங்கும்
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
வீழ்சடை வெள்ளிக்குன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
மால்விடை தனைக் கண்ட
என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம்
ஆகிய ஈசனுக்கே.

கைத்தல நிறைகனி அப்பமொடவல் பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணிக்
கற்றிடு மடியவர் புத்தியில் உறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன் மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புர மெரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை யிபமாகி
அக்குற மகளுட னச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

ஆதியாய் நடுவும் ஆகி அளவிலா அளவும் ஆகிச்
சோதியாய் உணர்வும் ஆகித் தோன்றிய பொருளும் ஆகிப்
பேதியா ஏகம் ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொதுநடம் போற்றி! போற்றி!

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்ன சிவகதி தானே.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*திருச்சிற்றம்பலம்*

**ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த**

# சிவபுராணம்

*திருவாசகச் சிறப்பு*

தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே-எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்த னடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவா ருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவா ரோங்குவிக்குஞ் சீரோன் கழல்வெல்க

ஈச னடிபோற்றி எந்தையடி போற்றி
தேச னடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமல னடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கு மன்ன னடிபோற்றி
சீரார் பெருந்துறைநந் தேவ னடிபோற்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பனியான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்இறந்து எல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யஎன் னுள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவுஇறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் றன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்தஅன் பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தான் னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பருக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவேயென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரு மேத்தப் பணிந்து

*-திருவாசகம்*

*திருச்சிற்றம்பலம்*

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லி மாலை

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பாடியது

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென்
வெள்ளையுள்ளத்
தண்டாமரைக்குத் தகாதுகொ லோசகமேழு மளித்து
உண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண்டாக்கும்
வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலா வல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே சகலகலாவல்லியே.

அளிக்குஞ் செந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன்னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங் கொண்டு
தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகலகலாவல்லியே.

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ் சொற்சுவை
தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந்
நாவினின்று
காக்கும் கருணைக்கடலே சகலகலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத்திருந்தாய் சகல கலாவல்லியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற்பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்த நல்காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலுங் வெங்காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் சகலகலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும்
பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல் காயுளங் கொண்டு
தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா லமுதந்தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப்பேடே சகலகலாவல்லியே.

சொல்விற்பனமுமவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள் வாய்நளினாசனஞ் சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமை நல்குங்
கல்விப்பெருஞ் செல்வப் பேறே சகலகலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ் ஞானத்தின் தோற்ற
மென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார் நிலந்தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே சகலகலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச் செய் வாய்படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும் விளம்பிலுன்
போற்
கண்கண்ட தெய்வமுளதோ சகலகலாவல்லியே.

* * *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமால் வழிபாடு

கண்ணன் எங்கள் கண்ணனாம்
கார் மேக வண்ணனாம்
வெண்ணெய் உண்ட கண்ணனாம்
மண்ணை உண்ட கண்ணனாம்

குழலி னாலே மாடுகள்
கூடச் செய்த கண்ணனாம்
கூட்ட மாக கோபியர்
கூட ஆடும் கண்ணனாம்

மழைக்கு நல்ல குடையென
மலை பிடித்த கண்ணனாம்
நச்சுப் பாம்பு மீதிலே
நடன மாடும் கண்ணனாம்;

கொடுமை மிக்க கம்சனைக்
கொன்று வென்ற கண்ணனாம்
தூது சென்ற பாண்டவர்
துயரம் தீர்த்த கண்ணனாம்.

*-திரு அழ வள்ளியப்பா*

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமரர் ஏறே
ஆயர்தம் கொழுந்தே என்றும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே.

*-தொண்டரடிப் பொடியாள்வார்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ திவ்யப் பிரபந்தம்

## திருப்பல்லாண்டு

காப்பு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா! உன்
சேவடி செவ்வி திருக்காப்பு

* * *

அடியோமோடும் நின்னொடும் பிரிவு இன்றி
ஆயிரம் பல்லாண்டு;
வடிவாய் நின் வல மார்பினில் வாழ்கின்ற
மங்கையும் பல்லாண்டு;
வடிவார் சோதி வலத்து உறையும் சுடர்
ஆழியும் பல்லாண்டு;
படைபோர் புக்கு முழங்கும் அப் பாஞ்ச
சனியமும் பல்லாண்டே.

*-ஸ்ரீ பெரியாழ்வார்(திருமொழி)*

* * *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குலமுறை கிளர்த்தல் - கந்தையா கார்த்திகேசு

**அப்புக்குட்டி கந்தையா**

+

**கந்தையா சின்னப்பிள்ளை (சின்னன்)**

↓

வள்ளியம்மை - நாகேந்திரம்
சின்னத்தம்பி - செல்லம்மா
சின்னத்துரை - வேலாசி
கதிராசி - சிதம்பரப்பிள்ளை
❋ **கார்த்திகேசு - காமாட்சி**

**தேவி அம்பலவன் காசிப்பிள்ளை**

+

**காசி ஆறுமுகம் சேதுப்பிள்ளை**

↓

சின்னப்பிள்ளை - நாகமணி
சோமசுந்தரம் - இளையபிள்ளை
பார்வதி - கணபதிப்பிள்ளை
செல்லையா (தனுஸ்கோடி) - பூரணம்
❋ **காமாட்சி - கார்த்திகேசு**
ஏகாம்பரம் - சேதுப்பிள்ளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org